# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

10 - வகுப்பு

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 50

அ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 x 1 = 8

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2. "தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

3. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் -
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

4. மேன்மை தரும் அறம் என்பது?
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறு பிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது?

5. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் -
அ) உதியன் சேரலாதன் ஆ) அதியன் பெருஞ்சாத்தான்
இ) பேகன் கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி

6. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

பாடலைப் படித்து விடை தருக.

*"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"*

7. இவ்வடிகள் இடம் பெற்ற நூல்?
அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) காலக்கணிதம்

8. காருகர் பொருள் தருக.
அ) ஓவியர் ஆ) கைத்தொழில் செய்வோர் இ) நெய்பவர் ஈ) பொற்கொல்லர்

ஆ. எவையேனும் ஆறனுக்கு விடை தருக. **6X2=12**

9. பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
10. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
11. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.



Scanned with CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

12. குறிப்பு வரைக - அவையம்.
13. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?.
14. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக: அ) மன்னார்குடி ஆ) கும்பகோணம்
15. கலைச்சொல் தருக. அ) Consulate ஆ) Territory
16. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

இ. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா). **4X3=12**

17. அடிமாறாமல் எழுதுக.
'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல், அல்லது 'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்
18. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
19. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?
20. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
21. கி) மொழி பெயர்க்க:


Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

22. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு எழுதுக.
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

ஈ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. **2x5=10**

23. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. *(அல்லது)*
ஆ) பாட்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக

24. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



உ. விரிவான விடையளிக்க. **1x8=8**

25. அ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக:

<u>மகளிர் நாள் விழா</u>

இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 14.11.2022

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியர் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக:
சாலைப் பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.



Scanned with CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

இரண்டாம் இடைப்பருவத்தேர்வு 2023 , தஞ்சாவூர் மாவட்டம்

தமிழ் - விடைக்குறிப்பு

1) அ. திருப்பதியும் திருத்தணியும்

2) ஈ. நெறியோடு நின்று காவல் காப்பவர்

3) இ. வலிமையை நிலைநாட்டல்

4) அ. கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

5) ஆ. அதியன், பெருஞ்சாத்தன்

6) இ. இடையறாது அறப்பணி செய்தல்

7) ஆ. சிலப்பதிகாரம்

8) இ. நெய்பவர்

9) பாசவர் – வெற்றிலை விற்பவர்கள்

வாசவர் – நறுமணப் பொருட்களை விற்பவர்

பல்நிண விலைஞர் – பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்

உமணர் – உப்பு விற்பவர்

10) ம.பொ.சி. வறுமையிலும் நூல் வாங்குவதற்குப் பணமில்லாத நிலையில் பழைய புத்தகங்கள் வாங்கி படிப்பார். இவர் விருப்பமான புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்கும் வழக்கம் உள்ளவர். இவர் பல வேளைகளில் பட்டினி கிடந்து புத்தகம் வாங்கி ஆனந்தம் அடைவார்.

11) வெட்சி - கரந்தை, வஞ்சி - காஞ்சி , நொச்சி - உழிஞை

12) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தன.

"அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" என்கிறது புறநானூறு.

உறையூரிலிருந்த அவையம் தனிச்சிறப்புப் பெற்றது.

மதுரையிலிருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

13). காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும். வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார். வாளித்தண்ணீர், சாயக்குவளை, துணிகந்தையானாலும், சாயம் அடிக்கும் தூரிகைகட்டையானாலும் சுத்தம்

www.Padasalai.Net www.CBSEtips.in

செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

14) அ. மன்னை. ஆ. குடந்தை

15) அ. தூதரகம் ஆ. பிரதேசம்

16) வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று இரண்டடிகள் கொண்டதாய் வருவது குறள் வெண்பா.

எ- கா ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

17) தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந் துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

18) இடம்:

'ம.பொ.சி'யின் தன் வரலாற்றுப் பகுதியில் சிற்றகல் ஒளி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

பொருள்:

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திர மாநிலத் தலைவர்கள் விரும்பினர். அதனை எதிர்த்து ம.பொ.சி. கூறிய கூற்று இது.

19) முதல் மழை விழுந்தவுடன் நிலம் ஈரத்தால் பண்பட்டது. விரைந்து சென்று பொன் போன்ற ஏரிலேகாளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர். ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர். மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

20) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அரசியல் அறம்:

நீர் நிலையைப் பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச்செய்வதும் அரசனின் அறம்.

வணிகத்தில் அறம்:

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருத்தல் கூடாது. நோக்கமின்றி அறம் செய்வதே வணிக அறனின் மேன்மையாகும்.

போர் அறம்:

தமிழர்போர்செய்வதிலும் அறநெறி உடையவர்களாக இருந்தனர். போர் அறம் என்பது, வீரமற்றோர், சிறார், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

உதவி செய்வதில் அறம்:

பிறருக்கு உதவி செய்வதை அறமாகக் கருதினர். அதாவது, தன்னைத் தாண்டி பிறரைப் பற்றிச் சிந்திக்கும் நிலை. 'பிழையா நன்மொழி' என்று நற்றிணையும் கூறுகிறது. நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது. மெய்பேசும் நாவே மனிதனை உயர்த்தும். சங்க இலக்கியங்கள் காட்டும் அறம் ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்குப் பண்பு நலனே காரணம் என்று சங்க இலக்கியம் மூலமாக அறிய முடிகிறது.

21) சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் தமிழகத்தின் ஐவகை நிலப் பிரிவுகளில் மருதநிலம் பயிரிடத் தகுதியான வளம் நிறைந்த நிலமாக இருந்துள்ளது. போதுமான சூரிய ஒளி, பருவமழை மற்றும் வளமான மண் ஆகியவற்றைப் பொறுத்தே ஓர் உழவரின் செழுமை அமைந்தது. இயற்கையின் இந்தக் கூறுகளில் சூரிய ஒளி தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்பட்டது

22) ஒழுக்கத்தின் - நிரை, நேர், நேர். - புளிமாங்காய்

| | | |
|---|---|---|
| எய்துவர் | - நேர், நிரை | - கூவிளம் |
| மேன்மை | - நேர், நேர் | - தேமா |
| இழுக்கத்தின் | - நிரை,நேர், நேர் | - புளிமாங்காய் |
| எய்துவர் | - நேர், நிரை. | - கூவிளம் |
| எய்தாப் | - நேர், நேர். | - தேமா |
| பழி | - நிரை. | - மலர். |

23) அ. மருவூர்ப்பாக்கத்து வணிகவீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி விற்பது போல இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன. குளிர்ச்சி பொருந்திய சந்தனம், பூ வகைகள், ஊதுவத்தி, அகில் போன்ற நறுமணப் பொருள்களும் இன்றைய வணிக வளாகத்திலும், கிடைக்கின்றன, விற்கப்படுகின்றன.

பொன், மணி, முத்து, பவளம், ஆகியவை மருவூர்ப்காக்க வீதிகளில் விற்பனை செய்யப்பட்டது. இன்று வணிக வளாகத்திலும் நகைக்கடைகளில் பொன், மணி, முத்து, பவளம் விற்கப்படுகிறது,

இன்று அங்காடிகளில் தானிய வகைகளை எடை போட்டு பொட்டலங்களில் கட்டி விற்பனை செய்கின்றனர். மரூவூர்ப்பாக்கத் தெருக்களில் உப்பு, வெற்றிலை, நறுமணப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது போல், இன்றைய அங்காடிகளிலும் விற்கப்படுகின்றது.

வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள், இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப் போல, இன்றைய அங்காடிளிலும் விற்கப்படுகின்றது.

வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள், இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப் போல இன்றைய அங்காடி, வணிக வளாகங்களில் கிடைப்பதோடு, கூடுதலாக பல நவீனப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள (நெகிழி) பொருள்கள் நவீன அலங்காரங்களுடன் கிடைக்கின்றன.

மருவூர்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் செய்பவர், துணியாலும், கட்டையாலும் பொம்மை செய்பவர்கள் எனப் பல திறப்பட்ட கைவினைஞர்கள் இருந்தனர். அதைப்போலவே, இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் இத்தகு கைவினைக் கலைஞர்கள், நவீன தொழில் நுட்பத்துடன் தொழில் வல்லோராய் இருக்கின்றார்கள். அழகு மிளிரும் கைவினைப் பொருள்களைச் செய்து விற்பனையும் செய்கின்றனர்.

( அல்லது )

ஆ. நாட்டு வளம் மக்கள் வளம்

யானைகள் மட்டும் பிணிக்கப்படுகின்றன. மக்கள் பிணிக்கப்படுவதில்லைசிலம்புகள் மட்டும் புலம்பும் மக்கள புலம்புவதில்லைஓடைகள் மட்டும் கலக்கமடையும். மக்கள் கலக்கம் அடைவதில்லை மாங்காய் மட்டும் வடுப்படும். மக்கள் வடுப்படுவதில்லை மலர்கள் மட்டும் பறிக்கப்படுகின்றன மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை காடுகள் மட்டும் (கொடியவனாய்) கொடி உடையதாய் இருக்கும். மக்கள் கொடியவராய் இல்லை வண்டுகள் மட்டும் கள்(தேன்) உண்டு மயங்கும் மக்கள் கள் உண்பதில்லை மலை மூங்கில் மட்டுமே வெறுமையாய் இருக்கும் மக்களிடையே வறுமை இல்லை வயிலில் நெற்கதிர்ககள் மட்டும் பேராக எழுகின்றன சோழநாட்டில்

போர் இல்லை நீண்ட மலைகளை இருள் சூழ்ந்திருக்கின்றன நாட்டில் வறுமை இருள் இல்லை மான்களின் கண்கள் மருள்கின்றன மக்கள் கண்களில் மருட்சியில்லை குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன மக்கள் நிலை பிறழ்வதில்லை செவிலியரே சினங்கொள்வார் வேறு யாரும் சினம் கொள்வதில்லை புலவர் பாட்டில் பொருள் மறைந்து இருக்கிறதுசோழ நாட்டில் யாரும் பொருளை மறைப்பதில்லை

இசைப்பாணேர தெருவில் கூடி ஆடிப் பாடுவர் மக்கள் தெருவில் ஆடுவதில்லை

24) பொருத்தமான நயம் எழுதியிருப்பின் மதிப்பெண்.

25) அ.

பாணாதுறை மேனிலைப்பள்ளியில் 14-11-2023 அன்று பள்ளிக் கலையரங்கில் மகளிர் நாள் விழா தலைமையாசிரியர் தலைமையில் நடைபெற்றது. அனைத்து ஆசிரியர்கள், மாணவர்களும் கலையரங்கில் ஒன்று கூடினர் தலைமையாசிரியர் வரவேற்புரை வழங்க, விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த இதழாளர் திருமிகு கலையரசி அவர்கள் மகளிர் மேம்பாடு குறித்து சிறப்புரையாற்றினார்கள். பள்ளி ஆசிரியர்கள் பலர் சிறப்புரை வழங்க நன்றியுரையினை மாணவத் தலைவன் வழங்க நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிகழ்வுற்றது.

ஆ. முன்னுரை, பொருளுரை, ( உட்தலைப்புகளுடன்) முடிவுரை.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி

கும்பகோணம்

தொடர்புக்கு : 9443740120.

www.Padasalai.Net www.CBSEtips.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com